வியாசர்பாடியிலிருந்து சென்ட்ரல் - பாரிமுனைக்கு போக்குவரத்து நெரிசல் இன்றி செல்ல

# பேசின் பாலத்தை அகலப்படுத்த வேண்டும்!

## சட்டப்பேரவையில் - ஆர்.டி. சேகர் வலியுறுத்தல்!



*சென்னை, ஏப். 16 -*

“வியாசர்பாடியிலிருந்து - சென்ட்ரல், பாரிமுனைக்கு போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் செல்ல பேசின் பாலத்தை அகலப்படுத்த வேண்டும்!” என்று சட்டப்பேரவையில் பெரம்பூர் தொகுதி கழக உறுப்பினர் ஆர்.டி.சேகர் கோரிக்கை விடுத்தார்.

**ஆர்.டி.சேகர்:** வியாசர்பாடியிலிருந்து, *Central Railway Station* மற்றும் பாரி முனை நோக்கிச் செல்லும் கடுமையாக போக்குவரத்து நெரிசலுக்குள்ளாகும் பேசின் பாலத்தை அகலப்படுத்தும் பணியை அரசு மேற்கொள்ளுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** அவர் சொல்கிற சாலை என்பது நாடறிந்த சாலை. நெரிசல் அதிகமாக இருக்கும் என்பது அனைவருக்கும் புரிந்ததுதான். பேசின் பாலத்தையே அகலப்படுத்த முடியுமா? என்று சட்டப்பேரவை உறுப்பினர் ஆர்.டி.சேகர் அவர்கள் கேட்கிறார்கள்.

பேசின் பாலம் என்பது ஒரு புகழ்பெற்ற, அந்த காலத்தில் அமைக்கப்பட்ட பாலமாகும். அந்தப் பகுதியிலிருக்கின்ற பொறியாளர்களை அனுப்பி, அதற்காக மாற்றுப்பாலம் அமைக்க முடியுமா அல்லது இந்தப் பாலத்தையே விரிவுபடுத்த முடியுமா என்பதை தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து, அதற்கான சாத்தியக்கூறு இருக்குமானால், இந்த ஆண்டே அப்பணிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

தயாநிதி மாறன் - அன்பகம் கலை - நா.எழிலன் - மா.பா.அன்பு - வே.கௌதமன் பங்கேற்பு:

# ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி அனைத்து வட்டங்களிலும் தண்ணீர் பந்தல்!

## மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு திறந்து வைக்கிறார்!

*சென்னை, ஏப்.16-*

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்கள் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில் நீர், மோர் பந்தலை மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு திறந்து வைக்கிறார். தயாநிதி மாறன், எம்.பி., அன்பகம் கலை, நா.எழிலன், எம்.எல்.ஏ., மா.பா. அன்புதுரை, வே.கௌதமன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் நீர், மோர் பந்தல் திறப்பு நிகழ்வினை மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு இன்று (16.04.2025) காலை 10.00 மணி முதல் திறந்து வைக்கிறார்.

இதில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் நா. எழிலன், பகுதிக் கழக செயலாளர் மா.பா. அன்புதுரை, வே.கௌதமன், ப.பிரகாஷ், துபாய் வி.ஆர். விஜய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆகவே மேற்கண்ட நிகழ்வுக்கு சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதிக்குட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட / பகுதி / வட்ட அமைப்பாளர்கள், தலைவர், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி / வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் என பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.





இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய, பிஆர் அம்பேத்கர் பிறந்த தினத்தை முனனிட்டு, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 121 அ வட்ட திமு கழகத்தின் சார்பில், 121 (அ) வட்ட கழக அலுவகத்திலும், துலுக்கான தோட்டத்திலும் வட்ட செயலாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., முன்னிலையில், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மயிலை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள், 121 அ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.2 / பி.எல்.சி. நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திருத்துறைப் பூண்டி நகரக் கழக முன்னாள் செயலாளர்

# வழக்கறிஞர் ஜி.தர்மராஜ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.16-

திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.தர்மராஜன் (வயது 70) அவர்கள் உடல் நல குறைவால் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்கள் சட்டக் கல்லூரியில் பயின்ற போது கழக மாணவர் அமைப்பின் பொறுப்பாளராக இருந்து கழகப் பணி ஆற்றியவர். திருத்துறைப்பூண்டி நகரக் கழகத்தினுடைய செயலாளராக இருந்து திறம்பட பணியாற்றியவர்.

மேலும் திருத்துறைப்பூண்டி வழக்கறிஞர் சங்கத்தின் தலைவராகவும், திருவாரூர் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் அமைப்பாளராகவும், அரசு கூடுதல் வழக்கறிஞராகப் பணியாற்றியவர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களுக்கு கலைச் செல்வி என்கிற மனைவியும் கார்த்திக் ராஜன் என்கிற மகனும் ராஜலட்சுமி என்கிற மகளும் உள்ளனர்.

மறைந்த ஜி.தர்மராஜன் அவர்களின் இறுதி ஊர்வலம் 17.04.2025 வியாழன் அன்று காலை 11.00 மணியளவில் திருத்துறைப்பூண்டி ஆட்டூர் சாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை மாநகராட்சி நகரமைப்பு குழு தலைவரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான தா.இளைய அருணா இராயபுரம், மீனாட்சியம்மன் பேட்டையில் இருக்கும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மு.கோபி, நா.சண்முகம், எஸ்.திருஞானம், இ.மதன், பி.கண்ணன், ஆர்.வி.கணேஷ், கணேஷ், கார்த்திக் செங்குட்டுவன், ஜே.கே. நாதன், கா.கோவிந்தசாமி, எம். குமரன், சுவிஸ் இளையராஜா, கோ.ஹரிஷ் குமார், ஐ.சி.எப். பழனி, கோ.அண்ணாதுரை, லாட்டு கடை செந்தில், எம்.எம்.சந்துரு, தா.ரவி, ஜெ.தரணி, டில்லிபாபு, கோ.வேல்மணி, எம்.சுஜாவுதீன், பா.லியாகத்பாஷா, பி.வி. ஆறுமுகம், டி.சகாயம், ஜெய்சங்கர், எஸ்.கண்ணன், இரா.சரவணன், பிரணாவ் செந்தில், ஆர்.பி.சேகர், ஜெயசீலன், ரங்கா, சுந்தர், ஜெகதீஸ், கே.முனுசாமி, எம்.எம்.செந்தில் குமாரா, ஜி.தனசேகர், லாரன்ஸ், மோகன் மற்றும் பலர் உள்ளனர்.


# கண்ணீர் அஞ்சலி

திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சென்னை தெற்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்
பாலவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்
பாலவாக்கம் க.சோமு
அவர்களின் மனைவியும்
சென்னை பெருநகர மாநகராட்சியின்
183 வது வட்ட மாமன்ற உறுப்பினர்
மருத்துவர் ப.தமிழரசிசோமு
அவர்களின் தாயாருமான



திருமதி. வசந்தி சோமு
வயது 60 அவர்கள்

நேற்று 15.04.2025, மாலை 4.00 மணியளவில் இயற்கை எய்தினார்
அன்னாரின் இறுதி ஊர்வலம் 16.04.2025 மாலை
5.00 மணியளவில் பாலவாக்கம் இடுகாட்டில் தகனம் செய்யப்படும் என்பதனை
ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

கண்ணீருடன்...
183 வது வட்ட பாலவாக்கம் திமுக